**சுருக்கம்**

பொதுப்பணித்துறை - 2003-2004 ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பாசன தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகளை தூர்வாரி புதுப்பிக்கும் சிறப்பு திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் - வழங்கப் படுகிறது - ஆணைகள் வெளியிடப் படுகின்றன.

---

**பொதுப்பணி(நீ.வ.2)த்துறை**

அரசாணை (நிலை) எண். 191
நாள் : 22.5.2003

ஆணை:-

தமிழக அரசு சென்னை மாவட்டம் நீங்கலாக இதர 28 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து இந்த மாவட்டங்களில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்பு சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளலாம் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.. மேலும் வறட்சி நிவாரண நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வேலைக்கு உணவு அளிக்கும் சிறப்பு திட்டம் அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2003-2004 ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பாசன தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் அவ்வாறு உட்படாத நீர்நிலைகளை தூர்வாரி புதுப்பிப்பதற்கு ரூ.100 கோடி மொத்த ஒதுக்கீட்டுடன் சிறப்பு திட்டம் ஒனறு செயல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரொக்க உதவி அளிப்பதற்கு 2003-2004 நிதி ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஊதியத்தின் மறுபகுதியாக ரூ.75 கோடி அளவில் அரிசி வழங்கும் திட்டத்துடன் இணைந்திருக்கும்.

2. பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பாசன தொகுப்புக்குட்பட்ட சுமார் 5290 ஏரிகளும் மற்றும் அவ்வாறு உட்படாத சுமார் 5250 ஏரிகளும் உள்ளன, நீர்வள ஆதார அமைப்பின் மண்டல வாரியாக மாநிலத்திலுள்ள ஏரிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| மண்டலம் | அமைப்பு சாரா ஏரிகள் | அமைப்பு சார்ந்த ஏரிகள் | மொத்தம் | எண்ணிக்கை சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| சென்னை(7 மாவட்டங்கள்) | 2774 | 974 | 3748 | 35.6 |
| திருச்சி (8 மாவட்டங்கள்) | 705 | 1187 | 1892 | 17.9 |
| பொள்ளாச்சி (4 மாவட்டங்கள்) | 136 | 114 | 250 | 2.4 |
| மதுரை (8 மாவட்டங்கள்) | 1635 | 3015 | 4650 | 44.1 |
| மொத்தம் | 5250 | 5290 | 10540 | 100,0 |

இந்த ஏரிகளில் ஐரோப்பிய பொருளாதார குழுமம் ( EEC) தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ( NABARD) உலக வங்கி ஆகிய அமைப்புகளின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஏரிகளும் அடங்கும்.

3. தற்பொழுது தமிழக அரசின் 2003-2004 ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி தமிழ்நாட்டில் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாசனத் தொகுப்புக்குட்பட்ட மற்றும் அவ்வாறு உட்படாத ஏரிகள் ரூ.100 கோடி செலவில் தூர்வாரி புதுப்பிக்கப்பட இருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஏரிகளின் நீரியல் திறன், இத்திட்டத்தினால் கிடைக்கக்கூடிய சுற்றுச் சூழல் மேலாண்மை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு சுமார் 600 ஏரிகள் தேர்ந்தெடுக்கப்படும்.

மாநிலத்திலுள்ள மொத்த ஏரிகளின் எண்ணிக்கையில் ஒவ்வொரு மண்டலத்திலும் அமையப் பெற்றுள்ள ஏரிகளின் எண்ணிக்கை எவ்வளவு சதவிகிதமோ அந்த விகிதத்தின் அடிப்படையில் புனரமைக்கப்படவுள்ள 600 ஏரிகளின் மண்டல வாரியான தெரிவு கீழ்காண் சதவீதத்தில் அமையப் பெறும்

| | |
|---|---|
| சென்னை மண்டலம் | 35% |
| திருச்சி மண்டலம் | 20% |
| பொள்ளாச்சி மண்டலம் | 5% |
| மதுரை மண்டலம் | 40% |

மேலும் இது குறித்து ஒவ்வொரு ஏரிக்கும் நீர் பயனீட்டாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு (Water Users

Association) அவர்களின் கருத்தை அறிந்து அதன் அடிப்படையில் ஏரிகளில் பணிகள் தேர்ந்தெடுத்து செய்யப்படும். உலக வங்கி நிதியுதவியுடன் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளைப் பொதுவாகப் பின்பற்றியே இந்த திட்டப் பணிகளும் செயல்படுத்தப்படும்

4. வேலைக்கு உணவு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விவசாயத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்கு அரசு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்வதென முடிவெடுத்துள்ளது. எனினும் சில ஏரிகளின் மதகுகள் மற்றும் உபரி நீர்போக்கிகள் ஓரங்கள் ஆகியவைகளை செப்பனிட வேண்டியதாக இருக்கும். ஆதலால் சிமெண்ட் மற்றும் இரும்பு ஆகியவை வாங்குவதற்கென ரூ.5 கோடி செலவாகும் என்று எதிர் நோக்கி இத் திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.105 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

5. மேற்கண்ட சூழ்நிலையில் அரசு ஆழ்ந்த ஆய்வுக்குப் பின் 2003-2004 ஆண்டில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பாசன தொகுப்புக்குட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகளில் உலக வங்கியின் செலவில் புனரமைக்கப்பட்ட ஏரிகள் நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தும் மற்றும் செயல்படுத்தப்பட்ட ஏரிகள், மாநில நிதித் தொகுப்பின் கீழ் அப்போது புனரமைக்கப்பட்ட ஏரிகள் நீங்கலாக உள்ள ஏரிகளில் வடிநிலவாரியாக விகிதாசார அடிப்படையில் சுமார் 600 ஏரிகள் ரூ 105 கோடி (ரூபாய் நூற்றி ஐந்து கோடிகள் மட்டும்) செலவில் புனரமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல் தொகையில் விவசாய தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்க ரூ. 25 கோடி (ரூபாய் இருபத்தி ஐந்து கோடி மட்டும்) மற்றும் ஏரிகளின் மதகுகள் மற்றும் உபரி நீர் போக்கிகள் ஆகியவைகளை செப்பனிட சிமெண்ட் மற்றும் இரும்பு ஆகியவை வாங்குவதற்காக ரூ. 5 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) செலவினம் மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்படுகிறது.

7. மேலே பத்தி 5 ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல் தொகையில் விவசாய தொழிலாளர்களின் ஊதியத்தின் மறு பகுதியாக ரூ. 75 கோடி (ரூபாய் எழுபத்தி ஐந்து கோடி மட்டும்) அளவில் சம்பூர்ண கிராமப்புற வேலை வாய்ப்பு சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் அரிசியாக வழங்க ஆணையிடப்படுகிறது.

8. மேலே பத்தி 6 ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்க வேண்டும்:-

"4701-00- சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு 101 மேற்பரப்பு நீர் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JL 100 ஏக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டிற்கு பாசனமளிக்கும் ஏரிகளைத்

தூர்வாரி நிலை உயர்த்தும் திட்டம் - 16 பெரும் பணிகள்
(த.தொ.கு.எண். 4702-00- 101-JL 1605)".

9. மேலே பத்தி (6) ல் 2003-04 வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கு மேல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம் ரூ. 5 கோடி ஒரு புதிய துணை பணித்திட்டமாகும் (New Instrument of Service)இச்செலவினத்திற்கான சட்டமன்றத்தின் ஒப்புதல் உரிய நேரத்தில் பெறப்படும். இதனை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். அதற்கான அரசாணை நிதி (வ.செ.1) த்துறையால் தனியாக வெளியிடப்படும். இதற்கு தேவையான விவரங்கள் அடங்கிய உரிய விண்ணப்பத்தினை சென்னை-9, தலைமைச் செயலக நிதி (வ.செ.II)துறைக்கு அனுப்புமாறு சென்னை-5 பொதுப்பணித்துறை , நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் முதன்மை தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. வடிநில வாரியாக தேர்ந்தெடுக்கப்படும் ஏரிகளின் பட்டியலையும் அவற்றிற்கான விரிவான திட்ட மதிப்பீடு தொகையினையும் தெரிவித்து அரசின் ஒப்புதலுக்கு உடனடியாக அனுப்புமாறு தலைமைப்பொறியாளர் (வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்.) அவர்கள் பணிக்கப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.கு. எண். 265./DS(VNP)2003-1 நாள் 21.5.03-ல் பெற்று கூடுதல் நிதி ஒப்பளிப்பு பேரேட்டு எண் 106 உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்
அரசு செயலாளர்

பெறுநர்

முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்) பொதுப்பணித்துறை, சென்னை-5
அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர், நீ.ர்வள ஆதார அமைப்பு
மாநில கணக்காயர், சென்னை18 / 35
மாநில கணக்காயர், சென்னை18 / 35 (பெயரில்)

நகல்:-

முதலமைச்சரின் செயலர்,சென்னை-.9
அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்)த்துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் துறை, (பொதுப்பணி.II) ( வ.செ.1)த்துறை.சென்னை-9
இ.கோ. / உ.ந

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்